148—

மின்மாற்றி

***30194—திரு. சிவ.வீ. மெய்யநாதன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, மேற்பனைக்காடு ஊராட்சி, மேலக்காடு புதுக்குடியிருப்பில் மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஆலங்குடி தொகுதி, மேற்பனைக்காடு ஊராட்சி, மேலக்காடு, புதுக்குடியிருப்பில் மின்மாற்றி அமைக்கக் கோரியிருக்கிறார். தற்சமயம் மேற்பனைக்காடு என்னும் இடத்தில் அமைந்துள்ள 100 கே.வி.ஏ. மின்மாற்றியின்மூலம் அந்தப் பகுதிகளுக்கு மின் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. இப்போது அங்கு மின்பளு 86 KVA மட்டும்தான் இருக்கின்றது. எதிர்காலத்தில் மின்பளு அதிகமாகி தேவையிருப்பின், கூடுதலாக மின்மாற்றிகள் அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்கள்.

திரு. சிவ.வீ. மெய்யநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மேற்பனைக்காடு ஊராட்சி, மேலக்காடு புதுக்குடியிருப்பு பகுதியில் புதிய மின்மாற்றி கேட்டு இரண்டு வருடங்களுக்கும் மேலாகிறது. அந்தப் பகுதியில் தற்போதும் மின்தடை அடிக்கடி ஏற்படுகின்ற காரணத்தினால், புதிய மின்மாற்றி அமைத்துத் தர ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, புதுக்கோட்டை விடுதி ஊராட்சி, கும்மங்குளம் பகுதியிலும், திருநாளூர் ஊராட்சி, திருநாளூர் தெற்கு மாரியம்மன் கோயில் பகுதியிலும், ஆயிங்குடி ஊராட்சி, ஆயிங்குடி மையம் மற்றும்

A.D. colony பகுதியிலும், மாங்குடி ஊராட்சி, மருதங்குடியிலும், மாத்தூர் ராமசாமிபுரம் ஊராட்சி, அய்யனார் கோயில் அருகிலும், மாங்காடு ஊராட்சி, மாங்காட்டான்கொள்ளை, தடியமனை, பெரியகொள்ளை ஆகிய பகுதிகளிலும் புதிய மின்மாற்றிகள் அமைக்க வேண்டும். அதேபோல், ஆலங்குடி தொகுதியில், குறிப்பாக விவசாயம் சார்ந்த தொழில் அதிகமாக நடந்து வருவதால், அடிக்கடி மின்மாற்றிகள் பழுதடைந்து விடுகின்றன. அதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள். அதனைப் போக்குகின்ற வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதிய மின்மாற்றிகளை உடனுக்குடன் வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய மேலக்காடு, புதுக்குடியிருப்பு பகுதியில் இப்போது 50 வீட்டு மின் இணைப்புகளும், 10 விவசாய மின் இணைப்புகளும், ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் உள்ளன. மின்னழுத்தம் மொத்தம் 86 கே.வி.ஏ. ஆகத்தான் இருக்கிறது. இருந்தாலும்கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியபடி, இப்போது புதிய மின்மாற்றி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். HT line–லிருந்து நேரடியாக மின்மாற்றிக்கு வந்து, அங்கிருந்து LT line மூலமாக மின்சாரம் செல்லும். ஆனால், இப்பொழுதெல்லாம் அதைப் பிரித்து, 63 கே.வி.ஏ. அதேபோல 25 கே.வி.ஏ. என்று மாற்றி, 25 கே.வி.ஏ. மின்சாரத்தினை வீடுகளுக்கும், 63 கே.வி.ஏ. மின்சாரத்தினை தொழிற்சாலைகளுக்கும் கொடுக்கின்ற வகையில், HT line–லிருந்து நேரடியாகக் கொண்டு வரும் முறையை இப்போது நாங்கள் கொண்டுவரவிருக்கிறோம். அதனைக் கொண்டுவந்து, பிறகு அந்த மின்மாற்றி 90 நாட்களுக்குள் மாற்றியமைத்துக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னும் பல்வேறு பகுதிகளில் உள்ள மின்மாற்றிகளை மாற்றித் தர வேண்டும் என்று கேட்டார்கள். அங்கே மின் பளு அதிகமாக இருந்தது என்று சொன்னால் மாற்றித் தர நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு அம்மாவினுடைய அரசில், அதிகமான அளவில் மின்மாற்றிகளை மாற்றிக்கொண்டிருக்கிறோம்.

புதுக்கோட்டை பகுதியைப் பொறுத்தவரை, நீங்கள் அதிகமான கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். நானும் அதிகாரிகளிடத்தில் அதுகுறித்துச் சொல்லியிருக்கிறேன். விவசாயம் நிறைந்த பகுதியாக இருக்கின்ற காரணத்தினால் அங்கே அடிக்கடி மின்பளு குறைவாக இருக்கிறது என்றும் புகார் வருகின்றது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட பகுதிகளில் எந்தெந்த பகுதியில் மின்பளு குறைவாக இருக்கின்றது என்பதை ஆய்வு செய்து, அங்கே மின்மாற்றிகளை மாற்றியமைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கின்றேன். அதனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பகுதியிலே மின்பளு குறைவாக இருந்ததென்றால், உடனடியாக மாற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்கள்.

திரு. சிவ.வீ. மெய்யநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மூன்று ஆண்டு கால கோரிக்கை இது. வம்பன் பகுதியிலே 110/22 KV திறன் கொண்ட துணை மின் நிலையமும், அதேபோல, L.N. புரம் ஊராட்சி, அணவயல் கிராமத்தில் துணை மின் நிலையமும், கொத்தமங்கலம் ஊராட்சி, கொத்தமங்கலம் கிழக்குப் பகுதியில் துணை மின் நிலையமும் அமைக்க வேண்டுமென்று நீண்ட நாட்களாக கோரிக்கை வைத்து வருகிறேன். அதேபோல, மறமடக்கி ஊராட்சி, மறமடக்கி பகுதியில் தற்போது 33/11 KV திறன் கொண்ட துணை மின் நிலையம் இயங்கி வருகிறது. அந்தப் பகுதியிலே அடிக்கடி ஏற்படும் மின்பளு குறைவின் காரணமாக, விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். இந்தக் குறைபாட்டினைப் போக்குகின்ற வகையில், அது 110/11 KV திறன் கொண்ட துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்தப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே வேறோர் உறுப்பினர் கேள்வி கேட்டபோதுகூட நான் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர்

அவர்கள் குறிப்பிட்ட வம்பன் என்ற இடத்தில் துணை மின் நிலையம் அமைப்பதற்காக இடம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இப்போது ஒப்பந்தப்புள்ளி கோருகின்ற நிலைமையில் அந்தப் பணி இருக்கிறது. ஓராண்டு காலத்திற்குள் அந்தப் பணி முடிந்துவிடும். மேலும், L.N. புரம் என்ற இடத்தில் ஒரு துணை மின் நிலையம் வேண்டுமென்று அவர் புதிதாகக் கேட்டிருக்கிறார். தற்போது, L.N. புரம் அருகில் ஆவணம் என்ற பகுதியில் புதிதாக துணை மின் நிலையம் அமைப்பதற்குண்டான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். அவ்வாறு அங்கு ஒரு துணை மின் நிலையம் புதிதாக அமைக்கின்ற நேர்வில், L.N. புரம் என்ற இடத்தில் புதிய துணை மின் நிலையம் அமைக்கத் தேவையில்லை. ஏனென்றால், L.N. புரம் அருகிலேதான் ஆவணம் என்ற பகுதி இருக்கிறது. மேலும், சில பகுதிகளில் துணை மின் நிலையம் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். துணை மின் நிலையம் அமைப்பதைப் பொறுத்தவரை, நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். பொதுவாக, வருடத்திற்கு 50, 60 துணை மின் நிலையங்கள்தான் புதிதாக அமைக்க அனுமதி அளிக்கப்படும். ஆனால், கடந்த நான்கு ஆண்டு காலத்தில் மட்டும், கிட்டத்தட்ட 340 துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. டெல்டா மாவட்டங்களைப் பொறுத்தவரையில், நான் ஏற்கெனவே பலமுறை சட்டமன்றத்தில் சொல்லியிருக்கிறேன். அந்தப் பகுதிகள் விவசாயம் நிறைந்த பகுதிகளாக இருக்கின்ற காரணத்தினால், மின்னழுத்தம் குறைவாக இருக்கிறது என்று எந்தப் பகுதியிலிருந்தெல்லாம் புகார்கள் வருகின்றனவோ, அங்கெல்லாம் துணை மின் நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்பதுதான் எங்களுடைய எண்ணமாகும். அந்தவகையில், துணை மின் நிலையங்கள் அமைக்க இடம் கிடைக்கின்ற பகுதியில் நாங்கள் ஆய்வு செய்து, தேவையிருப்பின், புதிய துணை மின் நிலையங்களை அமைத்து வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதிகளையெல்லாம் குறித்து வைத்திருக்கின்றோம். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன இடங்களில் துணை மின் நிலையம் அமைப்பது குறித்து, நாங்கள் துறை அதிகாரிகளின்மூலம் ஆய்வு செய்து, தேவையிருப்பின், நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 149, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.